JUDICIAL FORM NO.53

( See Rule 42)
Deposition of Witness
(Chapter XXXIII Code of Criminal Procedure)
IN THE COURT OF JUDICIAL MAGISTRATE, PERUNDURAI

| | | | |
|---|---|---|---|
| Calendar | | C.C.No. | **3/2010** |
| Miscellaneous | | C.M.P.No | |
| Sessions | | S T C No. | |
| Deposition of witness for | **P.W. 5** | Prosecution /Defence / Court | |
| Name | **செல்லமுத்து (Retired Additional Commissioner)** | Village | |
| Father's Name | கருப்பண்ணன் | Taluk | |
| | | Age | |

**Accused absent**. **U/s**.317 **Cr**.**P**.**C petition filed and allowed**.

Solemnly affirmed in accordance with the provisions of the oaths Act 1969( Central Act 44 of 1969 ) of the day of **Date 11.11.2025.**

**முதல் விசாரணை**

**1)** நான் தமிழ்நாடு காவல் துறையில் துணை ஆணையாளராக பணிபுரிந்து ஓய்வு பெற்று விட்டேன். நான் பெருந்துறை காவல் நிலையத்தில் ஆய்வாளராக பணிபுரிந்து வந்த போது காவல் உதவி ஆய்வாளர் திரு. ஆனந்தகுமார் பணியில் இருந்த போது திரு. அருணாச்சலம் என்பவர் நிலையம் ஆஜராகி கொடுத்த எழுத்து மூலமான புகாரினை பெற்று பெருந்துறை காவல் நிலைய குற்ற எண். 1083/2008 சட்டபிரிவு 454, 380, இ.த.ச. பிரிவு மற்றும் Mo II(L) III(J)(4C) பிரிவின் படி முதல் தகவல் அறிக்கை பதிவு செய்துள்ளார். முதல் தகவல் அறிக்கையுடன் வாதியின் புகாரையும் இணைத்து கணம் நீதிமன்றத்திற்கு அனுப்பி வைத்துள்ளார். **முதல் தகவல் அறிக்கையின் சான்றிட்ட நகல் அ.சா.ஆ. 6 ஆக குறியீடு செய்யப்படுகிறது. (அசல் முதல் தகவல் அறிக்கை CC. 241/2009 வழக்கில் ஏற்கனவே அ.சா. 8 மூலம் குறியீடு செய்யப்பட்டுள்ளது)**

2) ஒரு நகலை என் புலன் விசாரணைக்கு வைத்ததை நான் எடுத்துக் கொண்டு 17.11.2008 ம் தேதி இரவில் சம்பவ இடமான பெருந்துறை, தென்றல் நகரில் வாதியின் வீட்டிற்கு சென்று சம்பவ இடத்தை பார்வையிட்டு சம்பவ இட சாட்சிகள் செந்தில்குமார் மற்றும் மகாலிங்கம் ஆகியோர்கள் முன்னிலையில் மாதிரி வரைபடம்

வரைந்து பார்வை மகஜர் தயார் செய்தேன். பார்வை மகஜரில் சம்பவ இட சாட்சிகள் இருவரிடம் சாட்சி கையொப்பங்களை பெற்றேன். **மாதிரி வரைபடத்தின் சான்றிட்ட நகல் அ.சா.ஆ. 7 ஆக குறியீடு செய்யப்படுகிறது. (அசல் மாதிரி வரைபடம் CC. 241/2009 வழக்கில் ஏற்கனவே அ.சா. 8 மூலம் குறியீடு செய்யப்பட்டுள்ளது)** சம்பவம் உண்மை என்று தெரியவந்ததால் சாட்சிகள் அருணாச்சலம், கௌரி, குப்புசாமி, கந்தசாமி ஆகிய சாட்சிகளை விசாரித்து அவர்களது வாக்குமூலத்தை தனித்தனியே பதிவு செய்தேன். பின்னர் பணியிட மாறுதல் ஆகிவிட்டதால் வழக்கு கோப்பினை ஒப்படைத்துவிட்டேன்.

**எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை**

1. அ.சா.ஆ. 7 முதல் தகவல் அறிக்கை வெற்றுத்தாளில் புகார்தாரரிடம் கையெழுத்து பெறப்பட்டு பின்னிட்டு நிரப்பப்பட்டது என்றால் சரியல்ல. புகாரில் கடைசி 2 வரிகள் களவு போன நகைகளின் மதிப்பு , பணம் ஆக மொத்தம் ரூ. 65,500/– என்பது வேறு சமயத்தில் வேறு நபர்களால் எழுதப்பட்டுள்ளது என்றால் சரியல்ல. வழக்கு எந்த தேதியில், எத்தனை மணிக்கு, என்னிடம் புலன் விசாரணைக்காக ஒப்படைக்கப்பட்டது என்றால் 17.11.2008 ம் தேதி ஒப்படைக்கப்பட்டது நேரம் தற்போது நினைவில் இல்லை.

2. வழக்கு கோப்பினை எப்போது, எந்த தேதியில் திரும்ப ஒப்படைத்தேன் என்றால் தற்போது ஞாபகம் இல்லை. தடய அறிவியல் துறைக்கு எந்த தேதியில் வேண்டுகோள் கடிதம் கொடுக்கப்பட்டது என்றால் 17.11.2008 ம் தேதி அன்றே கொடுத்தேன். வேண்டுகோள் கடிதம் நீதிமன்றத்திற்கு அனுப்பி வைக்கப்பட்டதா என்றால் ஆமாம். எந்த தேதியில் தடய அறிவியல் துறையினர் வந்தார்கள் என்றால் அன்றைய தினமே வந்தார்கள். ஒரு திருட்டு வழக்கு சம்பந்தமாக புலன் விசாரணை தொடங்க வேண்டும் என்றால் தடய அறிவியல் துறைக்கு தகவல் கொடுத்து அவர்கள் வந்து துப்பறிவு செய்த பின்னர் தான் புலன் விசாரணையை நான் தொடங்க வேண்டும் என்றால் சரியல்ல. தடய அறிவியல் துறைக்கு தகவல் கொடுத்து தடய அறிவியல் துறை அதிகாரிகள் சம்பவ இடத்தை பார்வையிட்டு ஆய்வு செய்தார்களா என்றால் ஆமாம்.

3. பார்வை மகஜர் மற்றும் மாதிரி வரைபடம் வரைவதற்கு முன்னர் தடய அறிவியல் துறையினர் சம்பவ இடத்திற்கு வந்து ஆய்வு செய்தார்களா என்றால் இல்லை முதலில் நான் தான் சென்று பார்வையிட்டேன். பின்னர் தான் தடய அறிவியல்

துறைக்கு தகவல் கொடுக்கப்பட்டது. நான் புலன் விசாரணை செய்த வரையில் தடய அறிவியல் துறையின் அறிக்கை பெறப்பட்டதா என்றால் இல்லை. நான் மாதிரி வரைபடத்தில் முன் கதவு உடைக்கப்பட்ட தாழ் என்று குறிப்பிட்டுள்ளேன். உடைந்த தாழினை கைப்பற்றி நீதிமன்றத்தில் ஒப்படைத்தேனா என்றால் ஒப்படைத்துள்ளேன். வழக்கிற்காக ஒப்படைத்ததாக பொய்யாக சொல்கிறேன் என்றால சரியல்ல. என்னுடைய மாதிரி வரைபடத்தில் சம்பவ இடத்தில் மரக்கதவு இருந்ததாக குறிப்பிடவில்லை என்றால் சரிதான்.

4. நான் தயார் செய்ததாக சொல்லப்படும் கைப்பற்றுதல் மகஜரில் உடைந்த பூட்டினை பற்றி மாதிரி வரைபடத்திலோ, பார்வை மகஜரிலோ குறிப்பிடவில்லை என்றால் சரியல்ல. பளுதடைந்த பூட்டு என்று தான் குறிப்பிட்டுள்ளேன் உடைக்கப்பட்ட பூட்டு என்று குறிப்பிடவில்லை என்றால் சரியல்ல. பூட்டிலிருந்து கைரேகை எதுவும் எடுக்கப்பட்டதா என்றால எடுக்கப்பட்டிருக்கும் தற்போது ஞாபகம் இல்லை. பார்வை மகஜர், மாதிரி வரைபடம் என் கையால் எழுதப்படவில்லை என்றால் நான் சொல்ல சொல்ல வேறு ஒரு நபர் எழுதினார். சொன்ன நேரத்தில் சொன்ன விதத்தில் தடய அறிவியல் துறைக்கு வேண்டுகோள் கடிதம் அனுப்பவில்லை தடய அறிவியல் துறையினர் சம்பவ இடத்திற்கு வரவில்லை என்றால் சரியல்ல. சொன்ன நேரத்தில் சொன்ன விதத்தில் , சாட்சிகள் விசாரிக்கப்படவில்லை என்றும் பார்வை மகஜர், மாதிரி வரைபடங்கள் தயாரிக்கப்படவில்லை என்றும் சொன்னால் சரியல்ல.

**மறுவிசாரணை**

இல்லை.

Signature of the Witness

திறந்த நீதிமன்றத்தில் சாட்சி சொல்லச் சொல்ல, என்னால் தட்டச்சருக்குச் சொல்லப்பட்டு, அவரால் திறந்த நீதிமன்றத்தில் தட்டச்சு செய்யப்பட்டு, சாட்சிக்கு படித்துக் காண்பிக்கப்பட்டு, சாட்சியால் சரி என்று ஒப்புக் கொள்ளப்பட்டு என் முன்னால் சாட்சியின் கையெழுத்து / கைரேகை பெறப்பட்டது.

நீதித்துறை நடுவர்,
பெருந்துறை